14

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051873

1. District மாவட்டம் : DVAC — PS: காவல்நிலையம் DVAC HQRS — Year: ஆண்டு 2020 — FIR No.: மு.த.அ. எண் 14 — Date: நாள் 04-11-2020

2. (i) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102.
   (ii) Act சட்டம்: The prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: [Amendment] Act - 2018 — Sections பிரிவுகள்: -
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 03.11.2020 — Date to : நாள் வரை 03-11-2020
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 13.30 hrs — Time to : நேரம் வரை 16.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03-11-2020 — Time நேரம் : 17.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.11.2020 — Time நேரம் : 11.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Northeast / 15 KM
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o The Executive Engineer, TANGEDCO.
   Anna Salai
   No:29, Lafond street.
   Chintadripet - Chennai. 600002.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Th. C.K. KUMARAN — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு - — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் District Deputy Inspector Cell - Officer - Chennai District — (g) Address : முகவரி - Chennai - Collectorate. Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ① Th. P. Buwaneswaran - Executive Engineer - TANGEDCO, Anna Salai No: 29, Lafond street, Chintadripet Chennai - 600002.
   ② Th. S. KUMAR - Assistant Engineer, TANGEDCO, Park Town, Flower Bazar Sub-Station Complex, NSC Bose Road Chennai - 600013

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No Delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Suspected bribe Money Rs1,29,400/- Seized

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed in Seperate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed N.RAVIKUMAR Rank Inspector of to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 4-11-20 | [signature] 04-11-2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N.RAVIKUMAR
Rank: நிலை Inspector of Police No. எண்
Special Investigation Cell
DVAC - Chennai-16.

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.14 சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

திரு.C.K.குமரன், மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை மாவட்டம், சென்னை-1. என்பவர் சென்னை. சிந்தாத்ரிபேட்டை. எண்.6. லேபாண்ட் தெருவில் செயல்பட்டு வரும் செயற்பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இயக்குதலும், பராமரித்தலும் அண்ணாசாலை கோட்டம் அலுவலகத்தில் 03.11.2020 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக அளித்த புகார் மனு மீது வழக்குபதிவு செய்வதற்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை. சிறப்பு புலனாய்வு பிரிவு- I, துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அளித்த ஆவணங்களை பெற்று அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் இணைக்கப்பட்டிருந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-600001. | காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள்.<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை.<br>சிறப்பு புலனாய்வு குழு-1,<br>ஆலந்தூர், சென்னை-16. |

கடித எண்.173/2020 நாள் - 03.11.2020

ஐயா,

பொருள் : இருதுறை கூட்டுத் தணிக்கை - செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம். சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 - கூட்டுத் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,29,400/- மற்றும் வாக்குமூலங்களை மேல்நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - தொடர்பாக.

---------

சென்னை-600002, சிந்தாதிரிப்பேட்டை, லேபாண்ட் தெரு, கதவு எண்.29, என்ற விலாசத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம். இயக்குதலும் பராமரித்தலும், அண்ணா சாலை கோட்டத்தின் செயற்பொறியாளர் அலுவலகத்தில் இன்று (03.11.2020) பிற்பகல் சுமார் 1.30 மணி முதல் 4.30 மணி வரை

நடைபெற்ற மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வுக் குழு-1, சென்னை-16 ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டுத் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மற்றும் யாராலும் கோரப்படாமல் கிடந்த பணம் மொத்தம் ரூ 1,29,400/- மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலராகிய என் முன்னால் பதிவு செய்யப்பட்ட திரு.P.புவனேஷ்வரன், செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இயக்குதலும் பராமரித்தலும், அண்ணா சாலை கோட்டம். சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 மற்றும் திரு.S.குமார், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இயக்குதலும் பராமரித்தலும், பூங்கா நகர், ஆகிய இருவரின் வாக்குமூலங்கள் ஆகியவைகளை இந்நிகழ்வின் போது தயாரிக்கப்பட்ட நடவடிக்கையுடன் மேல்நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- C.K.குமரன்.
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை மாவட்டம்,
சென்னை-600001.

03.11.2020
18.00hrs Tr.N.Ravi Kumar, Inspector, SIC is instructed to register a case.Signed xxxx (V.BASKARAN) DSP, SIC-I, 3/11/2020.

Sir, Received the endorsed complaint on 3.11.2020 at 18.00 hrs and registered a case in V&AC, HQRS Cr.No.14/2020 U/S 102 Cr.P.C & Section 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 4.11.2020 at 10.30 hrs and taken up for investigation

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (03.11.2020) சென்னை-2, சிந்தாதிரிப்பேட்டை, லெபான்ட் தெரு, எண்.6-ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அலுவலகம (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்), அண்ணா சாலை கோட்டம் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

............................................................................................................................

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1.<br>2. திரு.வா.பாஸ்கரன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>3. திரு.எஸ்.செந்தில்குமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>4. திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>5. திரு.என்.ரவிகுமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-2, சிந்தாதிரிப்பேட்டை, லெபான்ட் தெரு, எண்.6-ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அலுவலகம (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்), அண்ணா சாலை கோட்டம் அலுவலகத்தில் அரசு பணிகளை செய்வதற்கு லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி செயற்பொறியாளர், அண்ணாசாலை அலுலகத்தில் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (03.11.2020) மதியம் சுமார் 1.30 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2. இந்த கூட்டுத்தணிக்கையின்போது செயற்பொறியாளர் அலுவலகம் வடக்கு தெற்காக செல்லும் லெபான்ட் தெருவில் மேற்கு நோக்கி மேற்படி அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி செயற்பொறியாளர் அலுவலகத்தின் தரைத் தளத்தில் 110 KV துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. மேலும் முதல் தளத்தில் மேற்படி அலுவலகம் நுழைவாயில் வடக்கு நோக்கி உள்ளது.

3. மேலும் மேற்படி அலுவலகத்தின் செயற்பொறியாளர், அண்ணாசாலை, சென்னை திரு.பி.புவனேஸ்வரன் அவர்களின் அலுவலக அறையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரித்தபோது தனது பெயர் திரு.பி.புவனேஸ்வரன் என்றும் இவ்வலுவலகத்தில் செயற்பொறியாளர் அண்ணா சாலையாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட நிலையில் பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.18,500/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் ரூ.500 x 37 ஆகும். இந்த பணம் குறித்து திரு.பி.புவனேஸ்வரன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.18,500/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் ரூ.18,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் அவரது சொந்த பணம் ரூ.120/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் செயற்பொறியாளர் அவர்களுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் குமார் என்றும் தான் பூங்கா நகர் பகுதி உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும் அலுவலக நிமித்தமாக செயற்பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.10,900/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (ரூ.2000 x 1; ரூ.500 x 14; ரூ.200 x 2; ரூ.100 x 15) ஆகும். இந்த பணம் குறித்து உதவிப் பொறியாளர் திரு.குமார் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.10,900/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் அவரது சொந்த பணம் ரூ.280/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் திருப்பி அளிக்கப்பட்டது.

4. மேலும் தொடர்ந்து செயற்பொறியாளர் அறைக்கு வெளியே வலது பக்கத்தில் கிழக்கு பக்க சுவற்றில் கண்ணாடியுடன் கூடிய கை அலம்பும் இடம் காணப்பட்டது. அதன் அருகே இருந்த பச்சை நிற பிளாஸ்டிக் குப்பை கூடையில் காக்கி நிறத்தில் இரண்டு கவர்கள் காணப்பட்டது. அவற்றை ஆய்வு செய்த்தில் ஒரு காக்கி நிற கவரில் ரூ.500 கத்தையாக ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு காணப்பட்டது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் பணம் ரூ.50,000/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (Rs.500x 100). மற்றொரு காக்கி நிற கவரிலும் ரூ.500 கத்தையாக ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு காணப்பட்டது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் பணம் ரூ.50,000/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (Rs.500x 100). இந்த மொத்த பணம் ரூ. 1,00,000/- குறித்து சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் அவர்கள் செயற்பொறியாளர், அண்ணாசாலை, சென்னை திரு.பி.புவனேஸ்வரன் அவர்களிடம் கேட்டபோது அவர் இந்த பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், அந்த இடத்தில் பணம் வந்தது பற்றி தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். மேலும் அந்த அறையில் பணியிலிருந்த மற்ற அனைத்து அலுவலர்களிடம் இந்த பணம் குறித்து விவரம் கேட்டபோது அவர்களும் தங்களுக்கு இது குறித்து எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர்.

5. மேலும் செயற்பொறியாளர் அலுவலக அறைக்கு வெளியே இடது பக்கத்தில் இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் கிருத்திகா என்றும் தான் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.900/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

6. மேலும் அதே அறையில் அடுத்த இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் குழந்தை தெரேசா என்றும் தான் இவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.2,050/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

7. மேலும் அதே அறையில் அடுத்த இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் கே.சுந்தரராஜன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.170/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.20,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது தனது வயதான தந்தை திரு.குப்பண்ணா தற்போது எண் ணூரில் வசித்து வருவதாகவும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பதாகவும், அவரது ஓய்வூதியப் பணம் 02.11.2020 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஏ.டி.எம்-லிருந்து எடுத்ததாகவும், தனது தந்தையிடம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். இது தொடர்பாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஏ.டி.எம் மினி பட்டியல் பெறப்பட்டு ஆய்வு செய்தபோது அன்றைய தேதியில் பணம் ரூ.30,000/- எடுக்கபட்டுள்ளது தெரிய வந்ததால், அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

8. மேலும் அதே அறையில் அடுத்த இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் பரத் என்றும் தான் இவ்வலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.700/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

9. மேலும் அதே அறையில் அடுத்த இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் பாஸ்கர் என்றும் தான் இவ்வலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.5,250/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

10. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் செந்தில்குமார் என்றும் தான் இவ்வலுவலகத்தில் நிர்வாக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.1,500/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

11. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திலீப்குமார் என்றும் தான் இவ்வலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.7,200/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது தனது சம்பள பணத்தை கனரா வங்கி ஏ.டி.எம்-லிருந்து 31.10.2020ந் தேதி எடுத்து தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் தொடர்பாக அவருடைய கனரா வங்கி ஏ.டி.எம்-யின் மினி கணக்கு பட்டியலை ஆய்வு செய்தபோது அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.7,200/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

12. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் விமலா என்றும் தான் இவ்வலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.1,900/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

13. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் நந்தியம்மாள் என்றும் தான் இவ்வலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.600/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

14. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் செண்பகவள்ளி என்றும் தான் இவ்வலுவலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.8,450/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது தீபாவளிக்கு புது டிரஸ் வாங்க பணம் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

15. மேலும் அதே அறையில் மேற்கு பக்கத்தில் தனி அறையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ராமன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் உதவி நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது அவரது சொந்த பணம் என்று ரூ.600/- எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

16. மேலும் முதல் தளத்திலுள்ள அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும் அறையின் வலது பக்கத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ள பில்லிங் மற்றும் கலெக்வஷன் பிரிவு காணப்பட்டது. அந்த பிரிவில் இரண்டு கவுண்டர்கள் காண்ப்பட்டது. அதில் முதல் கவுண்டரில் பணியிலிருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் வி.ரமேவஷ், சிந்தாதிரிப்பேட்டை பகுதி பொது மக்களிடமிருந்து மின் கட்டண தொகை தொடர்பாக இன்றைய தேதியில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.60,455/- என தெரிவித்தார். இந்த மின் கட்டணம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அவரது கணிணியில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியல் மூலம் ஆய்வு செய்தபோது வசூல் செய்த பணம் சரியாக காணப்பட்டது. மேலும் இரண்டாவது கவுண்டரில் பணியிலிருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் சுதாகர், சிந்தாதிரிப்பேட்டை பகுதி பொது மக்களிடமிருந்து மின் கட்டண தொகை தொடர்பாக இன்றைய தேதியில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.3,24,707/- என தெரிவித்தார். இந்த மின் கட்டணம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அவரது கணிணியில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியல் மூலம் ஆய்வு செய்தபோது வசூல் செய்த பணம் சரியாக காணப்பட்டது.

17. மேலும் மேற்படி அறையில் நேர் எதிரில் வடக்கு நோக்கி உதவிப் பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) சிந்தாதிரிப்பேட்டை அலுவலக அறை காணப்பட்டது. அந்த அறையில் அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரித்தபோது தனது பெயர் வி.செந்தில்குமார் என்றும் இவ்வலுவலகத்தில் சிந்தாதிரிப்பேட்டை உதவி பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது பணம் ரூ.17,550/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது தனது சம்பள பணத்தை 02.11.2020ந் தேதி ஏ.டி.எம்-யிலிருந்து எடுத்து தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் தொடர்பாக அவருடைய கனரா வங்கி ஏ.டி.எம்-யின் மினி கணக்கு பட்டியலை ஆய்வு செய்தபோது அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.17,550/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

18. மேலும் மேற்படி அறையில் வலது பக்கத்தில் கிழக்கு நோக்கி உதவிப் பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) புதுப்பேட்டை அலுவலக அறை காணப்பட்டது. அந்த அறையில் அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரித்தபோது தனது பெயர் பி.அன்புக்கரசன் என்றும் இவ்வலுவலகத்தில் புதுப்பேட்டை உதவி பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது பணம் ரூ.3,160/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.3,160/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

19. மேலும் மேற்படி உதவிப் பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) புதுப்பேட்டை அலுவலக அறைக்கு எதிரே மேற்கு நோக்கி மதிப்பீட்டு அலுவலர், செயற்பொறியாளர்/அண்ணாசாலை திரு.பாண்டியன் என்ற பெயர் பலகையுடன் உள்ள சிறிய அறை காணப்பட்டது. அந்த அறையில் அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரித்தபோது தனது பெயர் எம்.ஆர்.பாண்டியன் என்றும் இவ்வலுவலகத்தில் மதிப்பீட்டு அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது பணம் ரூ.40/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.40/-ஐ அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

20. மேலும் மேற்படி அறையிலிருந்து இடது பக்கம் நுழைந்ததும் தெற்கு நோக்கி உதவி கணக்கு அலுவலர், சிந்தாதிரிப்பேட்டை அலுவலக அறை காணப்பட்டது. அந்த அறையில் உள்ளே நேர் எதிரே உள்ள அறையில் அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரித்தபோது தனது பெயர் மில்டன் பெரிஸ் என்றும் இவ்வலுவலகத்தில் சிந்தாதிரிப்பேட்டை உதவி கணக்கு அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது பணம் ரூ.9,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது தனது சம்பள பணத்திலிருந்து 01.11.2020ந் தேதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஏ.டி.எம்-யிலிருந்து எடுத்து தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் தொடர்பாக அவருடைய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஏ.டி.எம்-யின் மினி கணக்கு பட்டியலை ஆய்வு செய்தபோது அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.9,800/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

21. இந்த கூட்டுத்தணிக்கையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.1,29,400/- மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி முடிக்கப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (03.11.2020) மாலை சுமார் 4.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- C.K.குமரன்,
03.11.20
துணை ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-01.

ஒப்பம்/-வி.பாஸ்கரன்.
03.11.2020,
DSP/SIC-I,
V&AC, Chennai-16.

ஒப்பம்/-(S.SENTHIL KUMAR)
03.11.2020,Ins /SIC,
V&AC, CH -16.

ஒப்பம்/-(S.VALLINAYAGAM)
INSPR/ V&AC.
SIC, Chennai
03 11 2020

ஒப்பம்/-(N.RAVIKUMAR)
Inspector –SIC - II,
V&AC – Chennai,
03/11/2020.

ஒப்பம்/-(P BHUVANESWARAN)
03.11.2020
EE / O&M / Annasalai,
Chennai-02

ஒப்பம்/-(S.KUMAR),
03.11.2020.
(AE/O & M/ Parktown)

ஒப்பம்/-K.SUNDARAJAN.
3-11-20. O/o EE/A Salai
(Accts Supr). Ch-2

ஒப்பம்/-M.BASKAR,
03/11/2020
Commercial Inspector,
O/o EE/O&M/ ASalai,
Chennai- 2.

ஒப்பம்/-S.Thilip Kumar,
Commercial Inspector,
O/o EE/O&M/ A.Salai,
Chennai-02.

4-11-2020
(N. RAVIKUMAR)

**INSPECTOR OF POLICE**
**Special Investigation Cell**
**Vigilance & Anti Corruption,**
**Chennai - 600 016.**